**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>**

# M.C.O.P. No.161/2021

PW 1 கிருஷ்ணவேணி நாள் 08.08.2023

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. என் கணவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டினார் என்றால் சரியல்ல, அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். சம்பவத்தன்று என் கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்திருந்தால் தலைக்காயம் ஏற்படாது என்றால் சரிதான். விபத்து நடந்த விசயம் நான் கோயம்புத்தூரில் உள்ள ஹாஸ்டலில் வேலை பார்த்தபோது எனக்கு தெரியவந்தது. நான் கோயம்புத்தூரில் உள்ள ஹாஸ்டலில் சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தேன். தற்போது நான் அந்த வேலை பார்க்கவில்லை. நான் கூலி வேலை பார்க்கிறேன். விபத்து நடந்த அன்றே நான் என் கணவரைப்போய் பார்த்தேன். நான் அவரது உடலை வீட்டிற்கு கொண்டுவந்தபிறகு தான் பார்த்தேன். விபத்து குறித்து புகார் நான் கொடுக்கவில்லை. என் கணவர் டிராக்டர் மெக்கானிக் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் என் கணவரைப்பிரிந்து கோயம்புத்தூரில் வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் வேலை எதுவும் பார்க்கவில்லை என்றும், அவர் தான் கவனக்குறைவாக

வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.